**R 5840 (page 29)**

# சாந்தகுணத்தின் முக்கியத்துவம்

## THE VALUE OF MODERATION

திறவுகோல் வாக்கியம் : "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்"- பிலிப்பியர் 4:5.

**கேள்வி:** ....."உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகின்றார். இங்கே "சாந்தகுணம்" என்ற வார்த்தையில் உள்ள நுணுக்கமான கருத்து என்ன? மேலும் இந்த வார்த்தைகளுக்கும், அதை தொடர்ந்து வரும் "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" என்ற வாக்கியத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

**பதில் :** ...கர்த்தருடைய ஆவி என்பது ஞானத்தின் ஆவியும், நீதி நியாயத்தின் ஆவியும், அன்பின் ஆவியும், பலமும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியுமாய் கூறப்பட்டுள்ளது. ஆகையால் கர்த்தருடைய ஆவியை பெற்றுக்கொள்ளுகிற யாதொருவனும், அதை அவன் எந்த அளவிற்கு பெற்றுக்கொண்டுள்ளானோ, அந்த அளவிற்கு சிந்தையிலும் இருதயத்திலும் இந்த பண்புகளையும் பெற்றிருப்பான். ஒரு கிறிஸ்தவனின் அனுபவ துவக்கத்தில், இந்த சாந்தகுணம் அல்லது பெருந்தன்மை அல்லது புத்தியறிவின் அளவு மிகக்குறைவாகவே காணப்படும். ஆனால், படிப்படியாக இந்த பண்பின் மதிப்பையும் மேன்மையையும் அதிகமாக உணர்ந்து கொள்வான். ஆவியினால் அவன் பரிசுத்தமாக்கப்படும்போது அவனுடைய எண்ணங்கள் முன்பைக்காட்டிலும் காரணகாரியத்துடன், புத்திக்கூர்மையுள்ளதாக மாறுகிறது. அவன் மேன்மேலும் தெளிந்தபுத்தி, சாந்தம், பெருந்தன்மையின் ஆவியை பெறுகிறவனாயிருந்து, விரைவில் ஸ்தாபிக்க இருக்கும் இராஜ்யத்திற்கு மேன்மேலும் ஆயத்தப்படுத்திக்கொள்வான்.

இவ்விதமான மனப்பான்மை, அறிவின் விளைவாய் அதிக அளவுக்கு உருவாகும். அவன் தேவனையும், அவருடைய திட்டங்கள் குறித்தும், உலகத்தில் பாவம் தோன்றினதைக் குறித்தும், அது வந்த விதத்தைக் குறித்தும், அதற்கான தண்டனை அனைத்து மனுஷர் மீதும் வம்சாவழியாக வந்த விதத்தை குறித்தும் அதிகம்திகமாய் அறிய வரும்போது, கிறிஸ்துவின் உண்மையான சீஷன் சாந்தகுணத்தின் ஆவியினை அதிகமாய் உணர்ந்து, ஒருவேளை பரிபூரண மனிதர்களாக இருந்தால், அந்த பரிபூரணர்களிடத்தில் நடந்து கொள்வதைக் காட்டிலும், அதிக கவனத்துடனும், அன்பிலும் நடந்துக் கொள்வான். இந்த அபூரணத்தன்மை, எண்ணிக்கையிலும், அளவிலும் ஒவ்வொருவரிடத்திலும் வேறுபட்டு இருப்பதை நாம் உணரும் பொழுது, இரக்கம், சாந்தம், நீதிநியாயத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, எல்லோரிடமும் பொறுமையுள்ளவர்களா யிருந்து, நம்முடைய நடத்தையில் காரண காரியத்தை உணர்ந்து, சாந்தகுணமுள்ளவர் களாகவும், ஞானமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் கூறும் இந்த கட்டுப்பாட்டின் கட்டளையாகிய இந்த பண்பை சபையிடம் மாத்திரம் செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பிடாமல், எல்லா மனுஷரிடமும் காட்டவேண்டும் என்பதேயாகும். சந்தேகத்திற்கு இடமின்றி, இந்த சாந்தகுணம் முதலில் வீட்டில் துவங்கப்பட்டு, மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளும், தீமையின் உணர்ச்சிகளுமான கோபம், துர்க்குணம், தீய கற்பனைகள், பகைமை, வாக்குவாதம் ஆகியவற்றிற்கு எதிராக, நற்கிரியைகளை சபையில் காட்டுவதில் குறிப்பாக வெளிப்படுத்தப்படும். ஆகிலும், சாந்தகுணத்தின் ஆவி என்பது வீட்டிற்குள்ளாக மாத்திரம் என்ற கட்டுப்பாட்டிற்குள் நில்லாமல், நாம் தொடர்பு கொள்ளும் அனைவரிடத்திலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். அப்போஸ்தலர்களைக் குறித்து ஜனங்கள் "அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்கள் என்றும், அவரால் கற்பிக்கப்பட்டவர்கள் என்றும்

அறிந்துக் கொண்டார்கள்” என்று கூறப்பட்டிருக்கின்றது. நாமும் சகோதரர் மற்றும்
**R5840 : page 30**
உலகத்தாராகிய அனைவர் முன்பும் இவ்வாறாக வாழ வேண்டும். அதன் மூலம் அவர்கள் நம்மைப்பற்றிய அறிவை அடைவார்கள். நம்முடைய நடத்தையானது நம்மை நாம் அடையாளப்படுத்திக்கொள்ளுகிறதும், நாம் தொடர்புகொண்டிருக்கீறதுமான மாபெரும் உயர்ந்த நோக்கத்திற்கு நற்கீர்த்தி பெற்றுத்தருகிறதாயிருக்க நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருக்க வழிவகுக்க வேண்டும் என்பதற்கும், “கர்த்தர் சமீபமாயிருக்கிறார்” என்ற வாக்கியத்திற்கும் உள்ள தொடர்பு என்னவெனில், கர்த்தருடைய ஜனங்கள், தேவனுடைய வார்த்தையில் உள்ள வாக்குத்தத்தங்களை தங்கள் சிந்தனையின் எதிர்பார்ப்பாக அஸ்திவாரமிடவேண்டும் என்பதேயாகும். அதாவது, மேசியாவின் இராஜ்யம் வெகு சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படவிருப்பதை நினைவில் கொண்டிருப்பது, அவர்கள் ஒரு முன்னுதாரத்துவமான வாழ்வை வாழ்வதற்கு உதவியாக இருக்கும். இப்பகுதியை அப்போஸ்தல காலத்து சபையினர், மாபெரும் ஏழு-ஆயிர-வருட-வாரத்தின் பிற்பகுதியில் கர்த்தர் வந்திருந்து, தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, உலகிலுள்ள சகலத்தையும் செம்மையாக்குகிற மாபெரும் ஒய்வு சமீபித்திருக்கிற காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருப்பதால், அவர்கள் பொறுமையுடனும், கவனத்தோடும் இருக்க முடியும் என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமா, அல்லது காலத்தின் கண்ணேட்டத்தில் அதாவது கர்த்தருடைய பிள்ளைகள் சாந்தகுணம் என்ற ஈவை வெளிப்படுத்துவதற்கு கொஞ்ச காலமே இருப்பதால் அதை செயல்படுத்த வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமா என்று நமக்கு தெரியவில்லை. எப்படியாயினும், பாவத்தை எதிர்த்திருப்பது இன்னும் அதிக நாள் நீடிக்காது என்பதை அறிந்திருப்பதால், இந்த சிந்தையை நம்முடைய மனதிற்கு முன்பாக நிறுத்தும் போது நாம் அதிக பொறுமையை மிக சுலபத்துடன் செயல்படுத்தலாம்.

இதை போன்ற ஒரு கருத்தைதான் அப்போஸ்தலர் கூறுகிறார் : “கர்த்தருடைய ஜனங்கள் சந்திக்கும் உபத்திரவங்கள், அவர்களுக்கு வெளியாக்கப்பட இருக்கும் மகிமையோடு ஒப்பிடத்தக்கவையல்ல”. இந்த சிந்தையானது, மற்றவர்களை வெகு மூர்க்கமானவர்களாகவும், கோபமுள்ளவர்களாகவும், கட்டுக்கடங்காதவர்களாகவும், செயல்புரியத்தூண்டும் சூழ்நிலைகளில், நம்மை வெகு சாந்தமுள்ளவர்களாக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுள்ளவர்களாக உருவாக்க வேண்டும். இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று நாம் அறிந்து கொண்டதால் மாத்திரம் அல்ல, மற்றவர்களின் பெலவீனத்தினிமித்தம் நம்முடைய உரிமைகளை தாக்குகிறார்கள் என்று நாம் அறியும் போதும்கூட நம்மால் மிகவும் சாந்தமாய் இருக்க முடியும்.

---------------------